1.4. தகுதிவாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படை.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1. தகுதிவாய்ந்த அபிப்பிராயம்

2.2. நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள்

### 2.2.1. இலங்கை அரசின் கணக்கீட்டு நியமங்கள்

**அ)** அட்டுறு (பெருகிய) செலவுகளின் அடிப்படையினைப் பின்பற்றாத குறைபாட்டினைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்படுகின்றது.

**ஆ)** நன்கொடைகள் மற்றும் பண அன்பளிப்புக்கள் ஆகியவற்றின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள சொத்துக்கள் சம்பந்தமான 14 மில்லியன் ரூபா தொகையானது 2015 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளதுடன், 149 மில்லியன் ரூபா மீள் மதிப்பீடு சம்பந்தமாக, கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

**அ)** இதில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை மதிப்பீடு செய்யுமாறு பிரதேச மதிப்பீட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை தொடர்ந்தும் எடுக்கப்படும்.

**ஆ)** மீளாய்வு வருடகாலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட நூலக நூல்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் ஆகியவற்றின் கொள்வனவு சம்பந்தமான தேய்மானம். 2015 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளதுடன், 2015 டிசம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மட்டுமே மதிப்பிறக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. இது இனி வரும் காலத்தில் செய்யப்படும்.

**இ)** கட்டணம் செலுத்தும் கற்கைநெறிகள் குறித்த பணியானது பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர், முன்கொண்டுவரப்பட்ட மீதிகள் பொதுச் சேம நிதிக்கு மாற்றப்படாமல், மீளாய்வு வருட வருமானத்துடன் கவனக் குறைவினால் சரிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய கவனக்குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஈ)** 2014 ஆம் ஆண்டில் நூலகத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் முறைமை 2015 ஆம் ஆண்டில் புலனாகாத சொத்தொன்றாகவே கருதப்பட்டது.

**உ)** முதலீட்டு வட்டிகள் தொடர்பாக செலுத்தப்பட்ட வரி பிடிப்பணத் தொகைகளை தனித்தனியாக இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.3. வருமதி மற்றும் கொடுக்குமதி கணக்குகள்**

நிறுவக விடுதியிலிருந்து கிடைக்கப் பெறப்பட வேண்டியுள்ள விடுதிக் கட்டணங்கள் ரூபா 123,265/= ஆக உள்ளதுடன், சான்றிதழ்களை வழங்கும் தருணத்தில் இந்தத் தொகைப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1.1. சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை.**

| | | |
|---|---|---|
| **அ)** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவையின் அத்தியாயம் XX உறுப்புரை 3(1) மற்றும் அத்தியாயம் X உறுப்புரை 1.6.1 | நிறுவகக் கல்விசார் உத்தியோகத்தர்களின் தினசரி வரவினை உறுதிப்படுத்துவதற்கென ஒவ்வொரு கல்விசார் பிரிவினாலும் பதிவேடொன்று பேணப்பட்டு வருகின்றது. |
| **ஆ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார் ஒழுங்குவிதி 756 | மருத்துவச் செடிகள் உள்ள சிறிய கட்டடத்தில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் இல்லாதிருந்தமையால் வருடாந்த இருப்பெடுப்பு நடாத்தப்பட வில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கட்டட மற்றும் உடைமைகள் குறித்த இருப்பெடுப்பு நடாத்தப்படும் என்பதுடன் அறிக்கையொன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும். |
| **இ)** | **அரச துறை தொழில்கள் சுற்றுநிருபம்** | |
| | i) 02-10-2007 ஆம் திகதிய 45 ஆம் இலக்க சுற்று நிருபம். | நிறுவகத்தின் முகாமைத்துவச் சபை மற்றும் நிதிக் குழு ஆகியவற்றின் அங்கீகாரத்தின் பின்னரே, நிதிசார் கூற்றுக்கள் முகாமைத்துவச் சபையின் தலைவராகவும் விளங்கும் நிறுவகப்பணிப்பாளர் மற்றும் பிரிதி நிதியாளர் ஆகியோரின் கையொப்பங்களுடன் கணக்காய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் நிதிசார் அறிக்கைகளை முகாமைத்துவச் சபையின் பொறுப்பு அறிக்கையுடனும் முகாமைத்துவச் சபையின் இன்னுமொரு உறுப்பினரின் |

கையொப்பத்துடனும் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ii) | 02 ஜுன் 2003 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்று நிருபம் | வருடாந்த அறிக்கையின் வரைபொன்றினை கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பித்தற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது |
| iii) | 14 ஜுன் 1994 ஆம் திகதிய 95 ஆம் இலக்க சுற்று நிருபம் | (a) நடாத்தப்பட்ட கட்டணம் செலுத்தும் கற்கை நெறிகள் சம்பந்தமாக, அத்தகைய கற்கை நெறிகளை தடங்கல் ஏதுமின்றி தொடரும் முகமாக, நிதிக்குழு மற்றும் முகாமைத்துவச் சபை ஆகியவற்றின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட கட்டளை விதியின் அடிப்படையில் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு அத்தகைய வெளிவாரி கற்கைநெறிகளிலிருந்து ஈட்டப்பெற்ற வருமானத்திலிருந்தே கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. |

(b) ஆயுர்வேத மருத்துவ மாணவர்களின் விசேட கல்விசார் செயற்பாடொன்றாக "அபிமான் அபியாச" நிகழ்வுத் திட்டத்தை வெற்றிகரமாக நடாத்தும் பொருட்டு, தொழில் வாண்மைமிக்க வளவாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளும் தேவை ஏற்பட்டது.

அத்தகைய சேவைகளுக்கான கொடுப்பனவாக வளவாளர் படியொன்று ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 2000 அல்லது 3000 என்ற கணக்கின்படி நிறுவகத்தின் நிதிக்குழு மற்றும் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது.

(c) மாணவர் மத்திய நிலையக் கட்டடத்தின் கட்டம் II இனை நிர்மாணிப்பதற்கான

கருத்திட்ட முன்மொழிவு சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உயர்கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட எச்ஈ/ஐடி/2013/32 ஆம் இலக்கமுடையதும் 7 மே 2013 திகதியிடப்பட்டதுமான அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், தேவையான அங்கீகாரம் ஆயத்த தயாரிப்பு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆயத்த தயாரிப்பு அடிப்படையின் கீழ் நிர்மாணங்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தைப் பூர்த்தி செய்தல் சம்பந்தமாக பல்கலைக்கழக முறைமையிலான முன் அனுபவம் இல்லாதிருந்ததனால், இந்தக் கருத்திட்டப் பணி ஆரம்பத்திற்குத் தேவையான விலைமனு அறிக்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வேலைகள் பொறியியலாளரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அதன் பிரகாரம், விலைமனு அறிக்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வேலைகள் பொறியியலாளரால் தயாரிக்கப்பட்டதனால், அத்தகைய சேவைகளை ஆற்றியமைக்காக குறித்த வேலைகள் பொறியியலாளருக்கு நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் 0.25 சதவீதத்திற்கு சமமான கொடுப்பனவொன்று வழங்கப்பட்டது.

இந்தத் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்திருப்பின், ஆலோசனை சேவை வழங்கும்

நிறுவனமொன்று நியமிக்கப்படவேண்டி இருந்திருப்பதுடன் கணிசமான செலவினமொன்றும் ஏற்பட்டிருக்கும். அத்துடன், பின்பற்றப்பட்டுள்ள இந்த முறையியலானது இந்தக் கருத்திட்டப் பணியினை துரிதகதியில் ஆரம்பிப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததெனலாம்.

| | |
|---|---|
| ஈ) 07/97 இலக்கமுடையதும் 03 பெப்ரவரி 1997 திகதியிடப்பட்டதுமான பொது நிருவாக அமைச்சு சுற்று நிருபம் | கணினிப் போதனாசிரியர்களுக்கான வார இறுதி மற்றும் பொது விடுமுறை தினங்களுக்கான கொடுப்பனவானது நடைமுறையில் உள்ள சுற்று நிருபத்திற்கு மாறுபாடானதாகவுள்ளது. எனவே, அத்தகைய சூழ்நிலைகளை தெளிவுபடுத்தி, பொருத்தமான முறைமையியலொன்றைத் தயாரித்து சமர்ப்பிப்பதன் பின்னர், திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

2. நிதிசார் மீள்நோக்கு

3.1. நிதிசார் பெறுபேறுகள்

3. தொழிற்பாட்டு மீள்நோக்கு

4.1. செயலாற்றுகை

**4.1.1. கல்விசார் செயலாற்றுகை**

(அ), (ஆ)

2012/2013 கல்வியாண்டிற்கான ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சைமாணி பட்டப்படிப்பு நிகழ்வுத் திட்டத்திற்கென 88 மாணவர்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டனர். இந்த எண்ணிக்கையானோரில் 16 மாணவர்கள் நிகழ்வுத் திட்டத்திலிருந்தும் விலகிக் கொண்டனர். இவ்வாறு விலகிக்கொண்ட 16 பேரில், 09 மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இடமாற்றங்களின் பிரகாரம் ஏனைய பல்கலைக்கழகங்களில் தம்மைப் பதிவு செய்தவர்களாக விளங்கினர்.

4.2. நிறுவகத்தின் கட்டணம் செலுத்தும் கற்கை நெறிகளின் பணியினை ஒழுங்கமைக்கும் வகையில், அதிகபட்சம் ஐந்து கற்கை நெறிகளுக்கு, அரச விடுமுறை தினமொன்றில் அல்லது வார இறுதி நாட்களிலான வரவுக்காக நாளொன்றுக்கு ரூபா 5000/= எனும் வீதப்படியிலான கொடுப்பனவொன்று அத்தகைய கற்கை நெறிகளின் ஈட்டங்களிலிருந்தும் தெளிவான சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் அத்தகைய காலம் வரையில், அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்குள்ளும் வழங்கப்பட்டது. அரச கருமப் பணியினைச் செய்தமைக்காக ஏனைய உத்தியோகத்தர்களுக்கென வழங்கப்படும் கொடுப்பனவு சம்பந்தமாக, இந்தக் கற்கை நெறிகளை தங்கு தடையின்றி தொடர்ந்து நடாத்தும் முகமாக விதிக்கப்பட்ட கட்டளை விதிகளின் பிரகாரம் நிதிக் குழுவினதும் முகாமைத்துவச் சபையினதும் அங்கீகாரத்துடன் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இந்தத் தொடர் நடவடிக்கை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் திறைசேரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### 4.3 தொழிற்பாட்டுக் குறைபாடுகள்

நூலகத்திலிருந்து இரவல் பெறப்பட்ட 7330 நூல்களில் 106 நூல்களே இன்றுவரை பெறப்பட வேண்டியிருந்ததுடன், இந்த நூல்களை சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது, இவ்வாறு சேகரிக்கப்பட வேண்டிய நூல்களின் பெறுமதி ரூபா 30,812.45 ஆகவுள்ளதென அறியத்தரப்படுகின்றது.

### 4.4 ஒப்பந்த நிருவாகத்திலான குறைபாடுகள்

நூலகக் கட்டடம் சம்பந்தமான இறுதி பற்றுச்சீட்டை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடமிருந்து தற்போது பெற்றுக்கொள்வதற்கான மேல் நடவடிக்கை யொன்று தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது.

### 4.5 உத்தியோகத்தர் நிருவாகம்

நிறுவகத்தில் குறித்த திகதியன்றுள்ளவாறு வெற்றிடமாகவுள்ள கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கல்விசார் உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்களாக தற்போது உள்ளவை 11 மட்டுமே.

## 5. பொறுப்புக் கூறலும் நல்லாட்சியும்

### 5.1. செயற்பாட்டு (செயல்) திட்டம்

செயற்பாட்டு (செயல்) திட்டமானது, மீண்டும் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் மீளவும் சமர்ப்பிக்கப்படுமென அறியத்தரப்படுகின்றது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் சபைப் பத்திரம் 207/07 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டு முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யூஜீசி/ஆர்ஈ/2014 ஆம் இலக்கமுடையதும் 31-12-2013 திகதியிடப்பட்டதுமான சுற்று நிருப கடிதத்தின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட அரச மானியம் எனும் அடிப்படையில் மதிப்பீடுகள் மீண்டும் தயாரிப்பட்டதுடன், குறித்த மதிப்பீடுகள் 22/01/2014 திகதியிடப்பட்ட சபைப் பத்திரம் 212/03 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டு முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

### 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை இயன்றவரை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தரப்படுகின்றது.

(ஒப்பமிடப்பட்டது)
தகுதிவாய்ந்த அதிகாரி
பேராசிரியர் ஜயந்த வெலிஹிந்த

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය
எனது இல.
My No. ஈசீ/எப்/ஜீடப்ளியுஏஜ/1/14/64

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2015 யூலை 09

தகுதி வாய்ந்த அதிகாரி,
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 இன் 1 ஆம் இலக்க கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் கட்டளையின் 19 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2014 மே 15 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் பாடநெறி வருமானம் காலப்பகுதியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 12 பாடநெறிகளுக்காக செலவிடப்பட்ட முழுச் செலவினமான ரூபா 11,514,837 தொகைக்குரிய வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு புறம்பாக வெகுமதி மற்றும் நன்கொடை என்பவற்றின் கீழ் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் ரூபா 14,986,418 தொகைக்கான காலக்கழிவு வெகுமதி மற்றும் நன்கொடை நிதியத்திற்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 148,719,740 தொகையான சொத்துக்கள் தொடர்பான காலக்கழிவு மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கிற்கும் வரவு வைக்கப்படாமல் செலவிடப்பட்ட மூலதன மானியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் காலக்கழிவு முறையே நிதிச்

செயலாற்றல் கூற்றில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைவடைந்திருந்தது.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) நிறுவகத்தால் கொள்வனவு செய்யப்பட்டதும் நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டதுமான 243.9 பேர்ச் காணி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்தொன்று பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு உட்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பயன்படு ஆயுட்காலம் பூராகவும் முறையான அடிப்படையொன்றில் அச்சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,859,676 கூட்டுப்பெறுமதியான நூலகப் புத்தகங்கள், விளையாட்டு அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பொருத்திகள் என்பவற்றிற்காக பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் ரூபா 97,296 தொகையான பெறுமானத்தேய்வு பெறுமதி கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட பாடநெறிகளுக்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 758,363 தொகையான பெறுவனவுகள் பொது ஒதுக்கத்திற்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் செயற்பாட்டுச் வருமானம் அதிகரித்திருந்தது.

(ஈ) 2014 ஆண்டில் நூலகத்திற்கு KOHA என்ற பெயரில் ரூபா 240,000 பெறுமதியான மென்பொருள் முறைமையொன்று (Software Package) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த அருவச் சொத்து நூலகப் புத்தகங்களின் கீழ் சேர்த்தல்களாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முதலீட்டு வட்டி ரூபா 4,309,183 தொகை தொடர்பாக செலுத்தப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிறுவகத்திற்குச் சொந்தமான 03 விடுதிகளுக்குரித்தாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை விடுதிக் கட்டணம் ரூபா 201,695 தொகையாக இருந்ததுடன், 2012/2013 கல்வியாண்டிற்குரிய விடுதிக் கட்டணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளியேறல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய புத்தகங்கள் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததன் காரணமாக கல்விசார் பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் போது செலுத்திய ரூபா 60,569,849 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 756 | மூலிகைத் தோட்டம் அமைந்துள்ள காணியில் காணப்படும் கட்டிடங்கள் மற்றும் அதற்குரிய பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) <u>பொது முயற்சிகள் சுற்றறிக்கை</u> | |
| (i) 2007 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 45 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களுடன் முகாமைத்துவ சபையின் பொறுப்புக்கள் கூற்று உள்ளடக்கப்படா திருந்ததுடன், நிதிக்கூற்றுக்கள் முகாமைத்துவ சபைக்காக கையொப்பமிடப்படாமல் பணிப்பாளர் மற்றும் நிதியாளரால் கையொப்பமிடப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) கட்டணங்கள் அறவிடும் பாடநெறிகள் தொடர்பாக சுற்றறிக்கைக்கு முரணாக நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட நியதிகளை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் முதலாம் காலாண்டில் 08 பாடநெறிகளுக்காக வார இறுதி நாள் படிகளாக ரூபா 572,000 தொகையும் மாதாந்தப் படிகளாக ரூபா 96,500 தொகையும் கல்விசார் பதவியணிக்கு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) 2014 மார்ச் 25 முதல் 2014 மார்ச் 28 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆயுர்வேத மாணவர்களுக்கான "அபிமன் அபியஸ–III "நிகழ்ச்சித்திட்டத்திற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக நிதிக்குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் மணித்தியாலத்திற்கு ரூபா 3,000 மற்றும் ரூபா 2,000 வீதம் வளவாளர் படிகளாக 06 வெளித்தரப்பு வளவாளர்களுக்கு மொத்தம் ரூபா 136,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(iii) ரூபா 46 மில்லியன் ஒப்பந்த பெறுமதியான மாணவர் நிலைய கட்டிடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வேலைப் பொறியியலாளரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக நேர் நிர்மாணப் பெறுமதியில் 0.25 சதவீதமான ரூபா 89,750 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் கௌரவப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஈ) 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 07/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடுவதற்காக 1/20 படிகளுக்கு உரித்துப் பெறாத கணனி மதியுரையாளர்களுக்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது அப்படிகளாக ரூபா 54,107 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,889,732 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,470,174 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 5,580,442 ஆல் குறைவடைந்தமைக்கு அரசின் மீண்டுவரும் மானியங்கள் ரூபா 32,421,646 ஆல் அதிகரித்தமை விசேடமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 கல்விசார் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2009/2010 ஆம் கல்வியாண்டில் ஆயுர்வேத மற்றும் மருத்துவ சத்திரசிகிச்சை வைத்திய பட்டப்படிப்பு பாடநெறியின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கை 107 ஆக இருந்ததுடன், அதில் 95 பேர் அல்லது 89 சதவீதம் சித்தியடைந்திருந்தனர்.

(ஆ) 2012/2013 ஆம் கல்வியாண்டின் போது இப்பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 88 ஆக இருந்த போதிலும், அதில் 07 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தினால் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நியதிகளின் பிரகாரம் அரசாங்க விடுமுறை தினங்கள் அல்லது வார இறுதி விடுமுறை நாட்களில் பாடநெறிகளை ஒழுங்கமைப்பதற்காக நாளொன்றுக்கு ரூபா 5,000 உயர் எல்லையின் கீழ் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், நாளொன்றில் ஒழுங்குபடுத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,000 வீதம் செலுத்தியமையால் மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் ரூபா 245,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் நூலகத்திலிருந்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 99,084 கூட்டுத்தொகையான 106 புத்தகங்களும் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 25 புத்தகங்களும் 2015 ஏப்ரல் மாதம் வரையிலும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

நூலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்த பேரிதலும், இறுதிப் பட்டியல் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாமையால் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,701,862 தொகையான மூலதன முற்பணத்தையும் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 8,262,316 தொகையான நிறுத்தி வைத்தல் கட்டணத்தையும் தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் மருத்துவ நிறுவகத்தின் கல்விசார் பதவியணியில் 22 வெற்றிடங்களும் கல்விசாரா பதவியணியில் 16 வெற்றிடங்களும் காணப்பட்டன. கல்விசார் பதவியணியின் வெற்றிடங்களுக்காக 21 வெளி விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 04 பிரதான நோக்கங்கள் காணப்பட்டதுடன், 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பட்டப்படிப்பு பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின் படிப்பு பரீட்சாத்திகளுக்காக சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகமொன்றாக மாற்றுவது முதலாவது நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இதற்காக ரூபா 3,765,000 தொகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், வருடாந்த செயன்முன்னேற்றத்தைக் கருத்திற் கொள்ளும் போது இதன் கீழ் உப செயற்பாடுகளின் ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், முழுத்தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 பெப்ரவரி 27 ஆம் திகதிய 224 ஆம் இலக்க முகாமைத்துவ சபை பத்திரத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் திருத்திய பாதீடு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அத்திருத்திய பாதீட்டின் பிரகாரமும் மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றை ஒப்பீடு செய்யும் போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான பொருண்மையான விலகல் காணப்பட்டதுடன், பாதீடு நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) நூலக கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)